சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதி சமதளமான பகுதியாக இருப்பதால் அங்கே நாம் நினைக்கிற அளவுக்கு தண்ணீர் நிற்க வாய்ப்பில்லை. உலக வங்கி திட்டத்தில், காவிரி மாடர்னை சேஷன் ஸ்கீமில் முன்பு அதை சேர்த்திருந்தார்கள். அதிகாரிகள் வந்து பார்த்ததில், அது லாபகரமானதாக இல்லை என்றும், திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முடியாது என்றும் சொல்லி விட்டார்கள். ஆகவே, இந்த அரசுப் பணத்திலிருந்துதான் நாம் அதற்காக செலவழிக்க வேண்டிய காலக் கட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் போகின்ற மழைதண்ணீர் தஞ்சை மாவட்டத்தின் கடைகோடியான சீர்காழி பகுதியில் வந்து தேங்குகிறது. அதனால்பல கோடி ரூபாய் செலவு செய்து மழை வெள்ளத்தால் மக்களுக்கு நிவாரணம் செய்ய வேண்டிய நிலைமை அரசுக்கு ஆண்டுக்காண்டு ஏற்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 10 மீட்டர் அந்தப் பகுதி பள்ளத்தில் இருந் தாலும் கூட கடலிலிருந்து அது 150 கிலோ மீட்டர் மேற்கே வெகு தொலைவில் இருப்பதால் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஆகவே இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் வெள்ளப் போக்கையும் தடுக்கலாம், கடைகோடியில் ஏற்படுகிற வெள்ளத்தையும் தவிர்க்கலாம், நிலத்தடி நீரும் நமக்கு அதிகமாக கிடைக்கிற வாய்ப்பிருப்பதால் மறு பரிசீலனை செய்து இதனை கட்டுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத் தைப் பொறுத்தவரையில் காவிரி நீரிலிருந்து ஒரு சொட்டு நீரை கூட பயன்படுத்தாமல் விட நாங்கள் தயாராக இல்லை ஆனால் அந்த நிலத்தின் அமைப்பு நமக்கு சாதகமாக இல்லை. நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு சென்று அந்த இடத்தை இரண்டு முறை பார்வையிட்டுள்ளேன். இருந்தா லும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்ந்துப் பார்த்து இந்த அரசு வேண்டிய முயற்சிகளை எடுக்கும்.

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, வீரசோழன் ஆற்றில் நீர்த்தேக்கம் அமைத்தல்.

*513—(*வினா எண். 12292)* **திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், கந்த மங்கலம் பாசன வசதிக்காக வீரசோழன் ஆற்றில் 73/7-ல் நீர்த் தேக்கம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் பேரூராட்சியில் காவல் துறையினருக்காக குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கி சுமார் ஆறு ஆண்டுகள் ஆகியும் இன்னும் குடியிருப்பு கட்டப்படாமல் இருப்பது குறித்தும் இதனால் காவல் துறையினர் குடியிருப்புகள் கிடைக்கப்படாமல் துன்புறுவதும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தஞ்சை மாவட்டம் (மேற்கு), பாபநாசம் நகரின் அருகிலுள்ள திருப்பலாத்துறை கிராமத்தில் 1.08 ஏக்கர் நிலம் காவல் துறையினருக்கு குடியிருப்புகள் கட்ட ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் பாபநாசம் காவல் நிலையத்தில் பணியாற்றும் 1 ஆய்வாளர், 1 உதவி ஆய்வாளர், 3 தலைமைக்காவலர்கள் மற்றும் 20 காவலர்கள் ஆக மொத்தம் 25 நபர்களுக்கு ரூ. 16.40 லட்சம் செலவில் குடியிருப்பு கட்ட காவல் துறை இயக்குநரிடமிருந்து நவம்பர் 1986 இல் செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. கட்டிடம் கட்ட அரசு அனுமதி ஏற்கெனவே அளிக்கப்படவில்லை.